

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கழக மறு சீரமைப்பு ஆலோசணைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் தலைமை கழக பிரதிநிதிகள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் இளையராஜா ஆகியோர் கலந்து கொண்டு கழக மறுசீரமைப்பு குறித்து ஆலோசனை வழங்கினார்கள்.

# பா.ஜ.க.வின் திட்டப்படியே த.வெ.க. செயல்படுகிறது!

இந்த தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தமிழ் நாட்டில் பாஜக விற்கு எதிரான போர் மெல்ல த.வெ.க. வால் மழுங்கடிக்கப்பட்டு வருகிறது.

பா.ஜ.க. தான் தமிழ் நாட்டின் உரிமைகளுக்கு எதிரி என்ற எண்ணத்தை ஒரு தலை முறையிடம் துளியும் போய் சேராமல் தி.மு.க.தான் எதிரி என்று மீண்டும் மீண்டும் கட்டமைக்கிறார் விஜய். இது முழுக்க முழுக்க பா.ஜ.க. வின் செயல்திட்டமே. விஜய் எந்த இடத்திலும் பா.ஜ.க.வை எதிர்க்கவில்லை. எதிர்க்கவும் மாட்டார்.

**மெல்ல 3 ம் இடத்திற்கு தமிழ்த்தாய் வாழ்த்து தள்ளப்பட்டுவிட்டது**

**தமிழ் நாட்டிற்கு வர வேண்டிய தொழில் முதலீடுகள் பா.ஜ.க. கூட்டணி ஆளும் ஆந்திராவுக்கு செல்லத் தொடங்கி விட்டன.**

**காவிரியில் நம் உரிமையை இழந்து நிற்கிறோம்.**

**பள்ளிவாசல்களிலும், கிறிஸ்தவ கூட்டங்களிலும் வெளிப்படையாக சங் பரிவாரங்கள் மிரட்டலை தொடங்கிவிட்டன**

**வந்தே மாதரம் முழுமையாகப் பாடப்படுகிறது**

**பேரவைக்குள் பாஜக வை வேறு யாரும் கண்டித்தாலும் அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது...**

அதே நேரம் கூட்டணிக் கட்சிகளின் பா.ஜ.க. எதிர்ப்பு எந்த வகையிலும் இந்தியா கூட்டணிக்கு வலு சேர்த்து விடக்கூடாது என்பதிலும் தவெக மிகக் கவனமாக அரசியல் சித்து விளையாட்டை பிரதமர் வேட்பாளர் மூலம் தொடங்கி விட்டது.

பா.ஜ.க. விற்கு எதிராக தி.மு.க. போர்க்குரல் எழுப்பினால் அடுத்த நிமிடம் த.வெ.க. இன்னும் வீரியமாக திமுக மீது கணைகளை வீசும்.

விஜய்க்கு இருக்கும் சினிமா புகழ், ஊடக வெளிச்சம் , சமூக வலைதள ஆதரவால் தி.மு.க. வின் பா.ஜ.க. எதிர்ப்புக் குரல் மறைக்கப்பட்டு விஜயின் தி.மு.க. எதிர்ப்புக் குரலே பெரிதாக்கப்படும். (எ.கா. வந்தே மாதரம் மசோதாவை தி.மு.க. கடுமையாக எதிர்த்தது. அதே சமயத்தில் த.வெ.க. தொகுதி மறுவரையறை கையில் எடுத்து திசை மாற்றியது )

2011 ல் இருந்து நான் விவாத நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தியுள்ளேன். கடந்த சில ஆண்டுகளாக பங்கேற்பாளராக கலந்து கொள்கிறேன். நான் அடித்துச் சொல்கிறேன் 2012 ல் இருந்தே (2014 க்குப் பின் இன்னும் தீவிரமாயிற்று) தமிழ் நாட்டில் ஒரு மாதத்தின் பெரும்பாலான வாதங்கள் பாஜக தொடர்புடையதாகவே இருக்கும்.

**இந்த 3 மாதங்களில் ஊடகங்களில் பா.ஜ.க. குறித்து எத்தனை விவாதங்கள் நடந்தன? நீங்கள் பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர்களை கடைசியாக எப்போது டி.வி.யில் பார்த்தீர்கள் என்று சொல்லுங்கள்.**

பா.ஜ.க. தொடர்பாக விவாதிக்கும் சூழல் எழும் போதெல்லாம், த.வெ.க. அதை திசை மாற்றும்

அ.தி.மு.க. பிரச்சினைகள் குறித்த விவாதங்கள் கூட பா.ஜ.க. வைச் சுற்றியே நடந்தன...

பா.ஜ.க. வைக் காப்பாற்றுவதோடு மாநிலத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள், ஆணவப் படுகொலைகள், கட்டுக்கடங்காத விலைவாசி இவை அனைத்தும் திசை திருப்பப்பட்டு திமுகவின் மீதான கட்டுக்கதைகள் பேசுபொருளாகின்றன.


த.வெ.க. பா.ஜ.க. திட்டப்படியே செயல்படுகிறது.

**இந்த உண்மைகள் தெரிந்ததால்தான் இடதுசாரிகள் முழுமையாக அப்பக்கம் செல்லவில்லை என்பது என் கருத்து**

**விசிக பொறுப்பில் இருப்போரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இது குறித்து பேசி வருவதும் அறிந்ததே...**

இப்போதும் புரியவில்லை என்றால் புரியும்போது எல்லாம் கை மீறிப் போயிருக்கும்

காலமே மிகச் சிறந்த ஆசிரியர்... குறித்து வைத்துக் கொள்ளுங்கள் காலம் இதை உணர்த்தும்.



**தமிழ் கேள்வி**
**தி.செந்தில் வேல்**

### தனி மனிதத் தாக்குதல், அறமற்ற செயலாகும்!


# மக்கள் பிரச்சினைகள் பற்றி முதல்வரின் பதிலுரையில் எதுவும் இல்லை!

### கம்யூனிஸ்ட் தலைவர்கள் பெ.சண்முகம் – மு.வீரபாண்டியன் கடும் கண்டனம்!

சென்னை, செப். 10-

மக்கள் பிரச்சினைகள் பற்றி முதலமைச்சரின் பதிலுரையில் ஒரு வரிகூட இல்லை என்றும் பேரவையை சர்க்கஸ் கூடார மாக மாற்றிவிட்டதாகவும் அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

விஜய் ஆட்சிக்கு ஆதரவு வழங்கி வரும் இடதுசாரிகளும் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளன.





சட்டப்பேரவையில் காவல் துறை மானிய கோரிக்கையின் மீது முதலமைச்சர் வழங்கிய பதிலுரையில், எந்த பதிலும் இடம் பெறவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கண்டனம் தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் பதிலுரையில் மக்கள் பிரச்சினை பற்றி பேசுவதற்கு பதிலாக முழுக்க முழுக்க எதிர்க்கட்சியை குறிவைத்து அடுக்கிய குற்றச்சாட்டுகளே நிரம்பி இருந்தன என்று அவர் விமர்சித்துள்ளார்.

அமலாக்கத் துறையின் குற்றச்சாட்டுகளை மட்டும் சொல்லி அதை ஊழல் என வகைப்படுத்துவது எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அவசரநிலை காலத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தாக்கப்பட்டார். அதனை உருவக் கேலி செய்யும் விதமாக பேசுவது யாராக இருந்தாலும் கண்டனத்திற்குரியது. அதை முதலமைச்சரே செய்திருப்பது பொறுப்பற்ற செயல் என்று கண்டித்துள்ளார்.

சட்டமன்றத்தை மக்கள் நலனுக்கு எந்த வகையிலும் எள்ளளவுக்கு கூட உதவாத தனிமனித தாக்குதல்களுக்கான இடமாகவோ அல்லது தங்கள் தலைவரை பாராட்டி பேசும் இடமாகவோ மாற்றுவது முற்றிலும் அறமற்ற செயலாகும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**மு.வீரபாண்டியன்**

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், உயிர்ப்புள்ள ஜனநாயகத்திற்கு சட்டமன்ற நடவடிக்கைகள் மக்களின் கோரிக்கைகளுக்கான பிரச்சினைகளை பேசவும், தீர்வு காணவும் கவனம் செலுத்திட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். எதிர்க்கட்சிகளின் குரலுக்கு செவி சாய்க்கவும், அதற்கு உரிய முறையில் பதிலளிப்பதற்கும் மாறாக சட்டமன்ற நடவடிக்கைகளில் வெறும் கூச்சல் மிகும் வாத முறையால் சட்டமன்றத்தின் நேரம் வீணடிக்கப்படுகிறது. சட்டமன்ற மரபையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்பதில் ஆளுங்கட்சிக்கு அதிக பொறுப்பு உள்ளது. அத்துடன் சபாநாயகர் நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

### சட்டப்பேரவையில் உடல் மொழிக்கு வேலையில்லை!


# உரையாற்றுவதுதான் உங்கள் வேலை முதல்வர் விஜய்!

### கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் – சமூக வலைதளப் பதிவு!

*சென்னை, செப்.10-*

*கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-*

*எல்லாவற்றையும் செய்துவிட்டு பின்பு வீட்டுக்குப் போய் #TWEET போடுவது இன்னும் நீங்கள் மாண்பு மிகு ஆகவில்லை என்பதையேக் காட்டுகிறது.*



*முதல்முறையாக நீங்கள் செய்திருந்தால் உங்களின் இந்த விளக்கத்தை உண்மையென மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.*

*ஆனால் தமிழ்நாட்டு சட்டமன்ற வரலாற்றில் யாரும் இதுவரை செய்திராத கீழ்த் தரமான செயலை நீங்கள் முதல்வர் பொறுப்பை ஏற்றப்பிறகு இது இரண்டாவது முறையாக செய்திருக்கிறீர்கள்.*

*எனவே வேண்டும் என்றே திட்டமிட்டு உள் நோக்கத்துடன் தியாக வரலாற்றுக்கு சொந்தமான தலைவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்திருக்கிறீர்கள்.*

*உழைப்பைத்தந்து, தியாகத்தை தந்து இந்த முதல்வர் பொறுப்புக்கு பல காலம் மக்கள் பணியாற்றிய பின் வந்திருந்தால் இதன் வலிமையை உணர்ந்திருப்பீர்கள்.*

*ஊதாரித்தனமான வசனங்கள் பேசி வலைதள பொய் பரப்புரை மூலம் பதவிக்கு வந்ததால் முதல்வர் பொறுப்பின் மாண்பும், சட்டமன்ற மாண்பும் இன்று தங்களால் கூனிக்குறுகியுள்ளது. இதனால் தமிழ்நாட்டு மக்கள் தலை குனிந்துள்ளனர்.*

*காவல்துறை மானியத்தின் பதிலுரையில் பதிலே இல்லாத பதிலுரையை அளித்த வரலாற்றைப்படைத்த முதல்வர் தாங்கள்.*

*எதிர்காலத்தில் சட்டமன்ற நடவடிக்கைகளை அறிந்துக்கொள்ள குறிப்புகளை படிக்கயிருக்கும் அடுத்த தலைமுறையினருக்கு நீங்கள் பதில் அளிக்கத்தெரியாத பொம்மை முதல்வர் என உங்களை நீங்களே பதிவிட்டு விட்டீர்கள்.*

*எனவே பழிப்பதற்கும், திமுகவை குற்றம் சுமத்துவதற்கும் நேரத்தை வீணாக்காமல் முதல்வர் என்னும் உயரிய பொறுப் புணர்ந்து பணியாற்றுங்கள்.*

*இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

## குமாரபாளையம் தெற்கு நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் தெற்கு நகரப் பொறுப்பாளர் ஜி.எஸ்.ஞானசேகரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற,

**கே.ஏ.இரவி** (171-டி, மேற்கு காலனி, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்) அவர்கள் குமாரபாளையம் தெற்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்: 08-09-2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### முன்னாள் எம்,எல்,ஏ, நல்லதம்பி – டாக்டர் ஆர்.கோகுல்கிருஷ்ணன் முன்னிலை!

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி சிறப்புரை!

*நாமக்கல், செப்.9-*

*நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், திருச்செங்கோட்டில் நாமக்கல் சாலையில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் தளபதி அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.நடன சபாபதி தலைமை தாங்கினார்.*

*கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி, திருப்பத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி மற்றும் மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் ஆர்.கோகுல்கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்க ளாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.*

*கூட்டத்தில் குமாரபாளையம் தெற்கு நகர பொறுப்பாளர் ஜி.பி.எஸ். ஞானசேகரன் மறைவுக்கு மாவட்டக் கழக சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது.*

*சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவரும், முன்னாள் முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கழக இளைஞர் அணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், கடந்த ஆகஸ்ட் 22ஆம் தேதி நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஒருமனதாக ஏற்றுக் கொள்வது,*

*மேலும், வருகிற 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்டத்தில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சார்பு அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

### கரூர் மாவட்டம் முழுவதும்

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் - முப்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாடுவோம்!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கரூர்.செப்.10.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பேச அனுமதிக்காததையும், மக்கள் பிரச்சினைகளை எடுத்து கூறும் கழகத்தினர் மீது அவதூறு வழக்கு போடும் ரீல்ஸ் அரசைக் கண்டித்து கரூர் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், தலைமைக் கழகப் பிரதிநிதிகள், தலைமை தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி, பெரம்பலூர் நகரக் கழகச் செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ., எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரை யாற்றினார்.

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத் துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக் குமார்,

அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் சூரியனூர் அ.சந்திரன், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர், கரூர் மேற்கு பகுதி செயலாளர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, க.சிவகாமசுந்தரி Ex.MLA, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, வி.கே.டி.ராஜ் கண்ணு, பி.பி.சரவணன், சி. கருப்பையா (எ) தர்மர், கே.சாமி நாதன், ஈ.ஜாபருல்லா, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ். காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாம சுந்தரி, கலாவதி சக்தி வேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிர மணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, மத்திய பகுதி பொறுப்பாளர் விஜி எஸ்.குமார்,

வடக்கு பகுதி கழக பொறுப்பாளர் எம்.பாண்டியன், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம். ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவி ராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் என்.செல்வராஜ், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ. ராமர் Ex.MLA, தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, குளித்தலை நகரக் கழக செயலாளர் இரா. மாணிக்கம் Ex.MLA, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர கழக செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ண ராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து (எ) சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தீர்மானம்:

கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவிப்பின்படியும், 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படியும், தலைமை கழகப் பிரதிநிதிகள் தலைமை தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அமுகமது சகி, பெரம்பலூர் நகரக் கழக செயலாளர் எம். பிரபாகரன் Ex.MLA ஆகியோர் முன்னிலையில் பகுதி. நகர, ஒன்றிய, பேரூர் கழகம் மறுசீரமைப்பு செய்வதெனவும், மேலும் பகுதி ஒன்றிய நகரபேரூர் வார்டுகிளை கழக செயலாளர்கள் வயது வரம்பின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்திடவும் தீர்மானிக்கப் படுகிறது.

எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து எழுப்பிய கேள்விக்கு முறையாக பதில் அளிக்காத முதலமைச்சரின் அவதூறுப் பேச்சுக்கு பதில் அளிக்க, எதிர் கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்காத தவெ.க. அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தமிழ்நாட்டின் தற்போது நிலவி வரும் சட்ட – ஒழுங்கு பிரச்சினைகளையும், ரீல்ஸ் ஆட்சியை பற்றியும் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் எடுத்துரைக்கும் முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் மீது லஞ்ச ஒழிப்புத் துறை மற்றும் காவல்துறை மூலம் பொய் வழக்கு போடும் த.வெ.க அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு அன்று காலை 10 மணிக்கு கரூர் பழைய பேருந்து நிலையரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மாரியாதை செலுத்தும் நிகழ்ச்சியிலும், செப்டம்பர் 15 ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவிலும், கழக நிர்வாகிகள் கலந்து கொள்வதெனவும், மேலும் செப்டம்பர் 17 ஆம் தேதி பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அன்று காலை 10.00 மணிக்கு திருமாநிலையூர் ரவுண்டானாவில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்வது என இக்கூட்டதில் தீர்மானிக்கப்படுகி றது.

தி.மு.க முப்பெரும் விழாவில் பெரியார் விருது விவசாய அணி துணைச் செயலாளர் கு. செல்லப்பா அவர்களுக்கும், அண்ணா விருது சேலம் மத்திய மாவட்ட அவைத்தலைவர்.சேலம் ஜி.கே. சுபாஷ் அவர்களுக்கும், கலைஞர் விருது கழக துணை பொதுச் செயலாளரும். கழக மாநிலங்களவை குழுத்தலைவர் சிவா எம்.பி அவர்களுக்கும், பாவேந்தர் விருது கழக மருத்துவ அணித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கனமொழி என்.வி.என்.சோமு அவர்களுக்கும், பேராசிரியர் விருது தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா எஸ்.அகமது தம்பி அவர்களுக்கும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விருது இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா அவர்களுக்கும், முரசொலி செல்வம் விருது கலைஞர் தொலைக்காட்சி செய்திகள் பிரிவு தலைவர் ப.திருமாவேலன் அவர்களுக்கும், விருதுகளை அறிவித்த கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்து கொள்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.